செய்தி வெளியீடு எண்: 963 நாள்: 13.07.2024

செய்தி வெளியீடு

**தமிழ்நாடு அரசின் சார்பில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்,**
**பெருந்தலைவர் காமராஜர் அவர்களின்**
**122–வது பிறந்த நாள் (15.7.2024) அன்று**
**திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து**
**மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122–வது பிறந்த நாள் மற்றும் கல்வி வளர்ச்சி நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் 15.7.2024 அன்று காலை 8.15 மணியளவில் திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீழச்சேரி, அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் விருதுநகரில் குமாரசாமி – சிவகாமி தம்பதியினருக்கு 15.7.1903 அன்று மகனாகப் பிறந்தார். காங்கிரஸ் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் அறிமுகத்தால் 1919 ஆம் ஆண்டு காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்து பல்வேறு சுதந்திரப் போராட்டங்களில் பங்கேற்றார். இதன் தொடர்ச்சியாக, 1930 ஆம் ஆண்டு நடைபெற்ற உப்புச் சத்தியாகிரக போராட்டத்தில் பங்கேற்றுச் சிறை சென்ற பின் அரசியல் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் 1936 ஆம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயலாளராகவும், 1937 மற்றும் 1946 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களில் வெற்றி பெற்று, சட்டமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தார். முன்னதாக 1941 ஆம் ஆண்டில் விருதுநகர் நகர்மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952 ஆம் ஆண்டு விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாட்டு மக்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வந்தார். இவற்றைத் தொடர்ந்து, 1954ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராக பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதன் முதலில் பொறுப்பேற்றார்.

தம்முடைய அயராத உழைப்பினால் சிகரம் தொட்ட கர்மவீரர் காமராஜர் அவர்கள், தமது 9 ஆண்டு கால ஆட்சியில் தமிழ்நாட்டில் பள்ளிகள் இல்லாத ஊரே இருக்கக்கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தில்

கிராமங்கள் தோறும் தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கி வைத்து கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டார். ஏழை மாணவர்கள் பள்ளிகளில் கல்வி கற்பதற்கு ஏதுவாக, இலவச மதிய உணவுத் திட்டத்தினைக் கொண்டு வந்தார். அதன் மூலம் கல்விக் கண் திறந்த காமராஜர் என இன்றும் போற்றப்படுகிறார். ஆவடி டாங்கி தொழிற்சாலை, திருவெறும்பூர் துப்பாக்கிச் தொழிற்சாலை, பாய்லர் தொழிற்சாலை உள்ளிட்ட பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தினார்.

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் அணைகளைக் கட்டி விவசாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். மேலும் பல்வேறு திட்டங்கள் வாயிலாக அனைத்துத் துறைகளையும் வளர்ச்சியடையச் செய்தார்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வாழ்ந்த காலத்தில் வாய்மை, நேர்மை, எளிமை, தூய்மை ஆகியவற்றுக்கு உதாரணமாகத் திகழ்ந்தார். அவர் மறைவுக்குப் பின்னர், 1976ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கிப் போற்றப்பட்டார். அவர் பெருமைகள் போற்றி நினைவு அஞ்சல் தலையும் வெளியிடப்பட்டது.

1959– ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக சென்னை மாநகராட்சியை முதன் முதலில் கைப்பற்றிய பிறகு தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஆற்றிய அரும்பணிகளைப் போற்றி பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவச் சிலையை சென்னை மாநகரில் நிறுவிட முடிவு செய்தது. அதன்படி, சென்னை மாநகராட்சி சார்பாக அண்ணா சாலையில் பல்லவன் இல்லத்திற்கு எதிரில் அமைக்கப்பட்ட பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவச் சிலையை 9.10.1961 அன்று, பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் திறந்துவைத்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15 ஆம் நாளினை "கல்வி வளர்ச்சி நாளாக" அறிவித்து சட்டம் இயற்றினார்கள். ஆண்டுதோறும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான்று பள்ளிகளில் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் சென்னையிலுள்ள கடற்கரை சாலைக்கு 'காமராஜர் சாலை' என்றும், சென்னை விமான நிலையத்தின் உள்நாட்டு முனையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயர் சூட்டப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122–வது பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் அலங்கரிக்கப்பட்ட பெருந்தலைவர்

காமராஜர் திருவுருவப் படத்திற்கு 15.7.2024 அன்று காலை 8.15 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

அதே நாளில், சென்னை, அண்ணா சாலை, பல்லவன் இல்லம் எதிரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு காலை 9.30 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செய்து சிறப்பிப்பார்கள்.

*******************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu